சார்பு நீதிமன்றம், அவிநாசி

**OS No. 15 /2015**

**நாள் : 06.12.2023**

**PW1 : ரத்தினம் (எ) கனகரத்திரம்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. என்னிடம் காட்டப்படும் 30.09.2004 ம் தேதியிட்ட உயில் சாசனத்தில் சாட்சி என்ற இடத்தில் 2 வதாக S.V துரைசாமி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்னுடை கணவரின் கையொப்பமாகும். மேற்படி உயில் ஆவணம் பி.வா.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் மேலே ஒவ்வொரு பக்கத்திலும் என்னுடைய தகப்பனாரின் கையொப்பம் உள்ளது என்று சொன்னால் சரிதான். எனது தந்தை பெயரில் 1941 ல் வழக்கு சொத்தின் ஒரு பகுதி கிரையம் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் முத்துகவுண்டர் மகன் கருப்பண கவுண்டர் பெயரில் கிரையம் உள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால், என் தாத்தா வாங்கியதாக தான் நான் கேள்விப்பட்டேன். 04.09.1941 ல் என் தந்தை தான் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால் அந்த சமயத்தில் என் தந்தை இளவராக இருந்தார். அவருக்கு கார்டியனாக சின்னக்காள் என்பவர் இருந்தார் என்றால் சரிதான். ஆனால் அவரை கருப்பாய்யம்மாள் என்று அழைப்பார்கள்.

2. என் தகப்பனாரின் தகப்பனார் முத்துசாமி பெயரிலோ அல்லது மேற்படி முத்துசாமியின் தகப்பனார் பெயரிலோ எந்த கிரைய ஆவணமும் இல்லை என்று சொன்னால் நான் கிரைய ஆவணத்தை பார்த்தது இல்லை. என் தகப்பனாருக்கு பூர்வீக சொத்து என்று காட்டுவதற்கு ஆவணம் இல்லை என்று சொன்னால் சரிதான். 1941 ல் என் தகப்பனார் பெயரில் பெற்ற கிரைய ஆவணம் தான் இந்த வழக்கு சொத்திற்கு மூல ஆவணம் என்று சொன்னால் அந்த சொத்து என் தாத்தா வாங்கிய சொத்தாகும். 04.01.1941 ல் என் தாத்தா என் கிரையம் பெற்றதாக அந்த ஆவணத்தில் வாசகம் இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. வழக்கு சொத்தின் ஒரு பகுதியை 08.06.1961 ல் என் தகப்பனார் கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். 22.09.1967 ல் சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டதா என்றால் அப்போது பாகம்பிரிக்கப்படவில்லை. நான் 22.09.1967 ம் தேதியிட்ட Ex.A.1 ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் தந்தை அவர் மைத்துனருடன் பாகம் செய்துள்ளார். ஆனால், அவர் குடும்ப உறுப்பினர்களுக்குள் பாகம் ஏற்படவில்லை. Ex.A.1 22.09.1967 பாககராரில் Ex.A.9 08.06.1961 கிரைய சொத்துக்கள் சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அது தனி இது தனியாகும்.

3. என்னுடைய தகப்பனாரால் தனிப்பட்ட முறையில் Ex.A.9 சொத்துககள் கிரையம் பெற்றப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. 1941 கிரைய சொத்துக்கள் மூன்றாம் நபர்களுக்கு அடமானம் வைக்கப்பட்டு, பின்பு திருப்பப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.12.06 17:22:09 +0530

தகப்பனாரின் சகோதரிகளுக்காக 1941 கிரைய ஆவணம் அடமானம் வைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தந்தை அப்படி சொல்லவில்லை. வழக்கு சொத்துக்களை என் தந்தை பரோடா வங்கியில் அடமானம் வைத்தாரா என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து சம்மந்தமாக வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. என் தகப்பனார் சுயமாக சம்பாதித்த சொத்து என்பதால்தான், 11.04.2007 ஆம் தேதியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றாலும், அவர் கடனை திருப்பி செலுத்தியுள்ளார் என்றாலும் எனக்கு தெரியாது. என் தந்தை அடமானம் பெற வேண்டிய அவசியம் இல்லை.

4) என் தந்தையின் சுய சொத்து என்பதால்தான் 2, 3 பிரதி வாதிகளையும், என்னையும் அடமானத்தில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் எனக்கு தெரியாது. என் தந்தை மற்றும் என் கணவர் ஆகியோர் பாலாஜி அருள் பைனான்ஸ் என்ற பெயரில் நிறுவனம் ஆரம்பித்தார்கள் என்றால் 1980-க்கு பின்பு ஆரம்பித்தார்கள். அந்த பைனான்ஸ்க்கு என் தந்தை முதலீடு செய்தார். என் தகப்பனாரும், ஒரு முத்துசாமி என்பவரும் விசைத்தறிக்காக இரண்டு குடோன்கள் கட்டினார்கள் என்றால் 1979 ஆம் ஆண்டு கட்டினார்கள். அந்த குடோனில் 7 , 8 ஆண்டுகள் விசைத்தறி இயக்கினார்கள். 1979-ல் விசைத்தறி குடோன் கட்டிய முத்துசாமி கவுண்டருக்கு 2 செண்ட் கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் ரூ.250/-க்கு கிரையம் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி கிரையம் சுத்த கிரையம் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **பி.வா.சா.2** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.

5) மேற்படி கிரைய ஆவணத்தில் 2, 3 பிரதிவாதிகளோ, நானோ தரப்பினராக இல்லை என்றால் சரிதான். அந்த கிரையத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். என் தந்தை தனக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்ட சொத்தில்தான் 2 செண்ட் விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தற்போது வரை வழக்கு சொத்திற்கு கந்தாயம் செலுத்தியதில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திலுள்ள கட்டிடங்களுக்கு என் பெயரில் வரி செலுத்தவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கந்தாய இரசீதுகள் 3 ஆம் பிரதிவாதி செலுத்தியவை 7 எண்ணிக்கை என்றால் சரிதான். மேற்படி கந்தாய இரசீதுகள் **Ex.B3** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கிற்கு பின்பு செலுத்தியுள்ளார்கள். என் தந்தை இறந்தபிறகு வெங்கடாசலம்தான் கந்தாயம் கட்டியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. பாகக்காராருக்கு பிறகு வெங்கடாசலம் பெயருக்கு தனிப்பட்டா கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 225 3B மற்றும் 3 C ஆகியவை வழக்கு சொத்து என்றால் சரிதான். அதற்கான பட்டா **Ex.B4** மற்றும் **Ex.B5** ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. நான் பட்டா வழங்க வேண்டாமென்று தடை செய்தேன்.

6) வழக்கு சொத்தின் விவரத்தில் Item 1-ல் 225/3A, 3B, 3C என்று உட்பிரிவு செய்யப்பட்டுள்ளபோது, நான் 225/3A மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நிறைய உட்பிரிவுகள் ஆனதால் எனக்கு தெரியவில்லை. 225/3B மற்றும் 3C சேர்க்கவில்லை என்றால் சரிதான். 225/2 அதன் பரப்பாக 0.07.0 என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால், அதன் பரப்பளவாக புஞ்சை 1.17 ஏக்கர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அந்த அளவுகளை மாற்றம்

K SURESH KUMAR
Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.12.06 17:22:15 +0530

செய்ய தெரியாததால் பிழையாகிவிட்டது. 2-வது Item சொத்தில் மத்தியில் உள்ள இடம் என்று பொதுவாக சொல்லியிருக்கிறேன். எனக்கு அளவு தெரியாதததால் உத்தேசமாக சொல்லியுள்ளேன். 1967 ஆம் ஆண்டு பாகக்கரார் பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் சொத்து விவரத்தில் காட்டவில்லை மற்றும் 3-ஆம் பிரதிவாதி பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்திலுள்ள சொத்து விவரத்தைத்தான் நான் காட்டியுள்ளேன் என்றால் இருக்கலாம். என் தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எல்லா சொத்துக்களும் என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சுயார்ஜித சொத்துக்கள் என்றால் சரியல்ல. அதனால்தான், என் தந்தை அடமானம், விற்பனை மற்றும் தானம் உள்ளிட்ட வில்லங்க பாராதீனங்கள் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

7) மூன்றாம் பிரதிவாதி பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் நடைமுறைக்கு வந்து, அதனடிப்படையில் அவர் கட்டிடம் கட்டியுள்ளார் என்றால் அந்த தான செட்டில்மெண்ட் செல்லாது. Ex.A1 மற்றும் Ex.A9 -ல் உள்ள சொத்துக்கள் என் தகப்பனாரின் சுயார்ஜித சொத்துக்கள் என்றால் சரியல்ல. என்னுடைய தாத்தா சொத்திலிருந்து சம்பாதித்த வருமானம் மூலம்தான் என் தகப்பனார் சொத்துக்கள் வாங்கினார். என் தாத்தா சொத்துக்களின் சர்வே எண் மற்றும் விவரங்கள் தெரியாது. நான் வழக்கு சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் எப்போதும் இருந்ததில்லை என்றால் சரியல்ல மற்றும் சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல. பகுதி பாகப்பிரிவினை மற்றும் அவசியத்தரப்பினர்களை சேர்க்காததால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

K SURESH KUMAR

Digitally signed by K SURESH KUMAR
Date: 2023.12.06 17:22:32 +0530

Subordinate Judge,
Avinashi.